# சுருதி பேதம் புலப்படுத்தும் பெண் நிலைப்பாடு

***திருமதி முனைவர் மு. சித்ரா தேவி***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
பி.எஸ்.ஆர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
செவல்பட்டி விருதுநகர் மாவட்டம்

**மலர்: 10**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2022**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v10iS1-Jul.5011

### முன்னுரை

இன்றைய இலக்கிய ஆய்வுத்துறையில் இக்கால இலக்கியங்களான சிறுகதை, புதினம் நாடகம் கவிதை பற்றிய ஆய்வுகள் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுவனவாக விளங்குகின்றன. தனிப்பட்ட ஒரு படைப்பாளனின் படைப்புகளை ஆராய்வதும், அப்படைப்புகளின் வாயிலாகப் படைப்பாளரின் திறனை ஆராய்வதும் ஒவ்வொரு ஆய்வுகளின் நோக்கங்களாக அமைகின்றன. இவ்வகையில் பெண் எழுத்தாளர் வாஸந்தியின் சுருதி பேதங்கள் என்ற நாவலைப் பல்வேறு நோக்கங்களில் ஆராய்வது இந்த ஆய்வுக் கட்டுரைக்கு நோக்கமாக அமைந்துள்ளது. இருப்பினும் ஆசிரியர் நாவலில் புலப்படுத்தும் பெண்மை பற்ற ஆராய்வதே இந்த ஆய்வின் முக்கிய நோக்கமாக அமைந்துள்ளது.

### ஆசிரியர் குறிப்பு

வாஸந்தி (பிறப்பு சூலை 26 1941) ஒரு தமிழக எழுத்தாளர் ஆவார். பங்கஜம் எனும் இயற்பெயரைக்கொண்ட இவர் மைசூர் பல்கலைக்கழகத்தில் ஆங்கில இலக்கியம் மற்றும் வரலாறு துறைகளில் பட்டம் பெற்றவர். நோர்வே நாட்டின் ஆஸ்லோ பல்கலைக்கழகத்தில் முதுலைச் சான்;றிதழ் பெற்றவர். இந்தியா டுடே தமிழ் பதிப்பின் ஆசிரியராக ஒன்பது ஆண்டுகள் பணியாற்றி துணிச்சலான பத்திரிக்கையாளர் என்று முத்திரை பதித்தவர் கலை, கலாச்சாரம் அரசியல் என்று பல்வேறு புள்ளிகளைத் தொட்டு செல்லும் இவரது கட்டுரைகளில் பலஅ வை வெளிவந்த காலத்தில் தீவிர கவனம் பெற்றதுடன் விவாதங்களையும் தோற்றுத்தன.

### விருதுகள்

நாற்பது நாவல்கள், பதினைந்து குறுநாவல்கள், ஆறு சிறுகதைத் தொகுப்புகள் என்று பல்வேறு நூலகளைப் படைத்துள்ளார். பஞ்சாப் சாகித்திய அகாதமி விருது உள்ளிட்ட எட்டு விருதுகளைப பெற்றுள்ளார்.

இவர் எழுதிய "வாஸந்தியின் சிறுகதைகள் எனும் நூல் தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் 2005ஆம் ஆண்டுக்கான சிறந்த நூல்களில் சிறுகதை எனும் வகைப்பாட்டில் பரிசு பெற்றிருக்கிறது.

## குடும்ப வாழ்வில் பெண் நிலைப்பாடு

குடும்பம் ஆண், பெண் என்ற இரு நிலைகளை உடையது எனினும் குடும்பத்தில் பெண்களே பெருமையாகப் பேசப்படுகிறார்கள். குடும்பத்தில் எல்லா விதமான உரிமைகளையும் பெற்றவர்களாக இருக்கிறார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டு முதல் பெண்கள் ஏற்றமும், எழுச்சியும் பெறத் தொடங்கினர். இத்தகைய குடும்ப வாழ்வில் பெண்ணின் நிலைப்பாடு பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

## குடும்பத்தில் பெண்ணின் சார்பு நிலை

பெண் பிறந்த நாளிலிருந்து அவளுக்குத் திருமணம் ஆகும் வரை பெற்றோரின் பராமரிப்பில் குறிப்பாகத் தந்தையின் ஆணைக்குக் கட்டுப்பட்டு இருக்க வேண்டும். திருமணமான பின்பு கணவன் கிழித்தக் கோட்டைத் தாண்டாமல் அடங்கி வாழ வேண்டும். முதுமைப் பருவத்தில் பிள்ளைகளுக்குக் கட்டுப்பட்டு அவர்கள் எவ்வளவுதான் வேண்டா வெருப்புடன் நடத்தினாலும் அதைச் சகித்துக் கொள்ள வேண்டும். பிள்ளையின் கையால் கொள்ளிவைக்கும் பாக்கியமாவது தனக்கு இருக்கிறதே என்ற மனத் திருப்தியுடன் மரணத்தை எதிர்நோக்கி நாட்களை எண்ணிக் கொண்டிருக்க வேண்டும்.

ஆதிக்கமற்ற குணமும், ஆக்கிரமிப்பற்ற தன்மையும், உடைமை உணர்வற்ற நிலையும் நல்ல குடும்ப வாழ்வை ஏற்படுத்த முடியும் என்பதை, ஜெயகாந்தன் புதிய சமூக மதிப்பீடாகச் சொல்லியுள்ளார்.

"சுருதி பேதங்கள் என்னும் புதினத்தில் வாஸந்தி நம் வாழ்வில் சந்திக்க முடியாத வித்தியாசமான பெண் பாத்திரமான ராதாவைப் படைத்துக் காட்டியுள்ளார்.

ராதா தன் அப்பாவிடம் விவாதம் செய்யாமல் பொறுமையுடன் வாழ வேண்டிய சூழ்நிலைக்கு ஆட்படுகிறாள்.

இப்புதினத்தில் ராதா காதலித்துத் திருமணம் செய்த போதும் கணவன் இறந்தவுடன் தன் அப்பாவின் கடுமையான ஏச்சுக்கும், பேச்சுக்கும் ஆளாகிறாள். அவரால் பல கொடுமைக்கு ஆட்படுகிறாள். ஒரு பெண் அறிவு வயப்பட்ட நிலையில் முடிவு எடுத்து, எப்படி வாழ வேண்டும் என்ற குடும்பப் பெண்ணின் வாழ்வியல் நியாயத்தை, ராதா பாத்திரத்தின் மூலம் ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார் எனலாம். குடும்பச் சூழலில் பெண்கள் வாழும் முறை பெண்கள் நம் நாட்டில் பல காலங்களில் தங்கள் உரிமைகளையும், சலுகைகளையும் மறந்து கடமைகளைச் செய்வதாகக் கருதிக்கொண்டு பல்வேறு கொடுமைகளை அனுபவித்து வந்துள்ளனர் இன்னும் ஒரு சில இடங்களில் தத்தம் நிலையில் இருந்து உயர்த்திக் கொள்ள வேண்டும் என்ற துடிப்பற்ற நிலை பெண்களிடையே காணப்படுகிறது. இவர்களின் குடும்பச் சூழலில் உள்ள அமைப்பு முறையே இதற்குக் காரணம் எனலாம். "நம் நாட்டுக் குடும்ப அமைப்பில் பெண்கள் மூன்று நிலைகளில் செயல்பட்டு வருகின்றனர். இதனை மரபுத்தனமான வாழ்வை எதிர்த்து வாழ்தல், மரபு நிலையில் வாழுதல், மரபை விட்டு ஒதுங்கி வாழும் பெண்கள்(1) என்பர். "வாஸந்தியின் சுருதி பேதங்கள் என்னும் புதினத்தில் இரண்டு வகையான வாழ்வியலை மேற்கொண்ட பெண்கள் சித்தரிக்கப்பபட்டுள்ளனர்.

## மரப்புதனமான வாழ்வை எதிர்த்து வாழ்தல்

முன்னோர் கடைப்பிடித்த பாதையைப் பின் தொடர்ந்து வரும் இளைய தலைமுறையினர் இக்காலச் சூழ்நிலைக்கு

ஏற்ப அதன் வழக்கங்கள் அமையாவிட்டாலும் அதனையே விடாப்பிடியாக மூர்க்கத் தனமாகப் பின்பற்றுகின்றனர். இந்த மரபினை ஏற்றுக்கொள்ளாத பெண்களே மரபுத் தனமான வாழ்வை எதிர்த்து வாழும் தன்மையினர். இவர்கள் தங்கள் எண்ணத்தின் படியே செயல்படுவார்கள்.

இப்புதினத்தில் குடும்பத்தலைவியாக இடம் பெறும் ஜெயாவை ஆசிரியர் மரபினை எதிர்த்து வாழும் பாத்திரமாகப் படைத்துள்ளார். மேலும் இப் புதினத்தில் ஜெயா தன் கணவனைப் பிரிந்து தன் பெண் குழந்தையுடன் தனித்து வாழ ஆசைப்படுகிறாள். கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன் என்பது தமிழ்நாட்டுப் பழமொழி இந்துச் சமூகத்தின் கட்டுப்பாட்டுக்குக் காலம் காலமாய்த் தமிழ்ச் சமுதாயம் உட்பட்டதால் எழுந்த நம்பிக்கை இது. இந்த நம்பிக்கை காரணமாகக் கணவன் எவ்வளவுதான் கொடியவனாக இருந்தாலும் மனைவியைத் துன்புறுத்து வதில் இன்பம் காண்பவனாக இருந்தாலும், ஒழுக்கம் கெட்டவனாக இருந்தாலும் அவனோடு கடைசி வரையில் வாழ்வதைக் கடமை என பெண்கள் நம்பி வாழ்ந்தும் வருகின்றனர். நம் நாட்டில் திருமணம் என்ற சமுதாய உறவு பெண்களில் சிலருக்குக் கழுத்தில் கட்டப்பட்ட கயிறாக அமைந்த போதும் அவர்களால் அதை மீற முடியவில்லை.(2) இத்தகைய போக்குக்கு எதிராக வாழ்வதில் ஜெயாவைத் தனிச் சிறப்பாக ஆசிரியர் படைத்துள்ளார். இதனை,

என் முடிவை நான் எப்பவோ தீர்மானிச்சாச்சே, திருப்பித் திருப்பி மாத்தறதுக்கு என்ன இருக்கு (3) சு.பே.ப.78 என்ற ஜெயா கூற்றின் மூலம் அறிந்து கொள்ளலாம்

ஒரு சமயம் குழந்தைக்கு அம்மை போட்டிருந்தது. எனக்கு அதுக்குப் பால் வாங்கிக் கொடுக்கக்கூட கையிலே காசில்லே. என் நிலைமை எப்படி இருக்கும்னு யோசுச்சு பாரு(7) சு.பே.ப.79 என்ற ஜெயா கூற்றின் மூலம் ஜெயா குடும்ப வாழ்க்கை எவ்வளவு கொடுமைக்குள்ளானது என்பதை அறிய முடிகிறது.

இத்தகைய துன்ப நிலையை அடைந்த ஜெயா கணவனின் சந்தேகப் பார்வையைப் பொறுத்துக் கொண்டு கணவனுக்குச் சேவகம் செய்யும் பெண்ணாக இல்லாமல். எழுச்சி கொண்டு வாழ நினைக்கும் புரட்சிப் பெண்ணாக ஜெயாவை ஆசிரியர் படைத்துக் காட்டி இருப்பது மரபுத்தனமான வாழ்வை எதிர்த்து வாழும் பெண்ணுக்குச் சான்றளிப்பதாக அமைந்துள்ளது எனலாம்.

## மரபை விட்டு ஒதுங்கி வாழும் பெண்கள்

பெண்கள் ஏதாவது ஒரு வகையில் துன்புறத்தப்படுகின்றனர். தன் சுற்றத்தாராலேயே ஆதரிக்கப்படாத நிலை, அவர்களின் தன்னியல்பான முன்னேற்றத்தைக் கண்டு தூற்றுவது. பெண்கள் தங்கள் திறமையை எல்லாம் வெளிக்காட்டிப் பணிபுரிந்து பாராட்டைப் பெற்றால் நாம் கூடப் பெண்ணாய் இருந்தால் சீக்கிரம் பெயர் வாங்கி விடலாம் என்றும், எங்கேயாவது தவறு நேர்ந்து விட்டாலோ, பெண்களுக்கெல்லாம் பொறுப்பான வேலையைக் கொடுத்தால் இப்படித்தான்(5) என்றும் பெண்களை இழிவாகப் பேசுகின்றனர். திறமையான பெண்கள் இவ்வாறு தரந்தாழ்த்தி கூறுவதனால் அவர்கள் குடும்பத்தின் மேல் வெறுப்புக் கொண்டு தனித்து வாழ முற்படுகின்றனர். இவர்களே மரபை விட்டு ஒதுங்கி வாழும் பெண்கள்.

சுருதி பேதங்கள் என்னும் புதினத்தில் ராதா காதல் திருமணம் செய்து கொள்கிறாள். கணவன் இறந்தவுடன் அப்பா வீட்டில் வாழ்கிறாள். இந்நிலையில் அப்பாவிடம் இருந்து ஆதரவான வார்த்தைகளை அவள் பெறவில்லை. அவளின் கடந்து போன வாழ்க்கையைக் கூறியே அவர் அவளைத் துன்புறுத்தினார். தந்தை என்னும் உறவு

அவளுக்கு இருந்தும் அவரிடமிருந்து அன்பைப் பெறாதவளாகவே ராதா இருக்கிறாள்.

இப்புதினத்தில் வரும் ராதா அப்பாவின் அன்பை எதிர்பார்க்கிறாள். ஆனால் அது கிடைக்கவில்லை. இருப்பினும் மீண்டும் படிப்பைத் தொடர்ந்து தனக்கென ஒரு வாழ்வைத் தேர்ந்தெடுக்கிறாள். அவள் வீட்டை விட்டு வெளியேறி தனியாக வாழ முற்படுகிறாள். எனவே மரபை விட்டு ஒதுங்கி வாழும் பெண்ணாக ராதாவை ஆசிரியர் படைத்துள்ளார் எனலாம்.

### பெண்கள் வாழ்வில் குடும்ப உறவுகளில் ஏற்படும் சிக்கல்கள்

சமுதாய அமைப்பில் குடும்பம் என்பது மிக முக்கியமானதாகும். குடும்பமே மனித வாழ்க்கையில் முதன்மை அங்கமாகக் கருதப்படுகிறது. அதில் நடுநாயகமாக இருந்து பங்காற்றுபவள் பெண் ஆவாள்.

**குடும்பத்தில் பெண் பெறும் இடம் பற்றிச் சில்வியா பெல்ட்மேன், குடும்பத்தில் பெண் ஒரு மதிப்பு மிக்க பயனுள்ள அங்கமாவாள் அவள் பிறருக்கு முன் மாதிரியாக இருக்கும் பட்சத்தில் அவள் ஒரு நல்ல மனைவியாக நல்ல தாயாக வீட்டை நன்கு நிர்வகிப்பவளாக இருப்பதில் நிறைவைத் தர வேண்டும்(6) என்கிறாள்.**

இத்தகைய பொறுப்பு மிக்க பெண்களே புனைகதைகளில் முக்கிய கருப் பொருளாக இடம் பெறுகிறார்கள். இருப்பினும் இப்புதினத்தில் ராதா அவளுடைய அப்பா உறவு நிலையில் சிக்கல்கள், ஜெயா அவளுடைய கணவன் உறவு நிலையில் சிக்கல்கள் பற்றி ஆசிரியர் படைத்துக் காட்டியுள்ளார் எனலாம்.

### குடும்ப உறவு நிலையில் தாய்மையின் நிலைப்பாடு


குடும்ப உறவு நிலையில் தாய் என்பவள் அன்புடையவளாகப் பெருமைக்குரியவளாகப் போற்றப்படுகிறாள். ஆனால் இப்புதினத்தில் தாய் தன் குழந்தை மீது சீறி விழுவதாகவும் வெறுப்பைக் காட்டுபவளாகவும் ஆசிரியர் விஜயாவின் தாயைப் படைத்துக் காட்டியுள்ளார் எனலாம்.

விஜயாவின் தாய் அவளைச் சிறு வயதிலேயே அனாதை ஆசிரமத்தில் சேர்த்து விட்டு சீ நாயே! உனக்கு இங்கே தான் இருப்பிடம்(7) சு.பே.ப.126 என்று கூறுகிறாள். இக்கூற்றின் மூலம் அன்பையே காட்டாத ஒரு தாயின் பாத்திரத்தை ஆசிரியர் புலப்படுத்தி இருப்பது போற்றுதற்குரியது எனலாம்

மனித வாழ்க்கையில் பொதுவாக மாற்றங்களைச் சந்திக்க வேண்டிய நெருக்கடி பெண்களுக்கே அதிகம் ஏற்படுகிறது. மனநிலை வளர்ச்சியும் பெண்களுக்கு வெகுவேகமாக ஏற்படுகிறது. இப்புதினத்தில் இடம் பெறும் ராதா கணவன் இறந்தவுடன் தன் அப்பாவின் வன்மையான பேச்சைப் பொறுக்க முடியாமல், மீண்டும் படிப்பைத் தொடர நினைக்கிறாள். குடும்பத்தில் அவளுக்கு ஏற்படுகின்ற நெருக்கடி நிலை காரணமாக படிக்க நினைத்தது ராதாவின் வாழ்க்கையில் சிறப்பான மாற்றத்தை ஏற்படுத்தியது எனலாம்

### திருமணத்திற்கு முன்னும், பின்னும் பெண்கள் உறவு நிலை

ஒரு பெண்ணை மையமாக வைத்து அவள் குடும்பத்தில் திருமணத்திற்கு முன் சந்திக்கும் உறவு நிலைகளையும், திருமணத்திற்குப் பின் குடும்பத்தில் சந்திக்கும் உறவு நிலைகளையும் கீழ்காணும் வரைபடத்தின் மூலம் அறியலாம்



### ராதாவின் உறவு நிலை

ராதாவின் திருமணத்திற்கு முன்பு இருந்த ஒரே உறவு அவளது அப்பா. ராதா பிறந்த போதே தாயை இழந்தவள். திருமணத்திற்குப் பிறகு அவளுக்கு இருந்த ஒரே உறவு கணவன் மட்டும். கணவன் இறந்த பின்பு மீண்டும் ராதாவிற்கு அவள் அப்பாவே துணையாக இருக்கிறார். இந்த உறவு நிலைகளைச் சுருதி பேதங்கள் என்னும் புதினம் புலப்படுத்துகிறது.

### ஜெயாவின் உறவு நிலை

ஜெயாவின் திருமணத்திற்கு முன்பு அவள் அம்மா, அப்பா, அண்ணன், அண்ணி உறவினர்களாகவும், திருமணத்திறக்குப் பின்பு அவள் கணவன், அத்தை, மாமா போன்றோர் இருந்தனர். இவ்விதமாக உறவுநிலையை இப்புதினத்தில் காண முடிகிறது.

### மாமியின் உறவு நிலை

மாமி சிறு குழுந்தையிலிருந்தே சித்தி சித்தப்பாவின் அரவணைப்பில் வளர்ந்தவள். அவள், கணவன் இறந்ததும் ராதாவின் வீட்டில் வேலைக்காரியாக இருக்கிறாள். இப்படிப்பட்ட உறவு நிலைகள் இருந்தும் மாமிக்கு எவரும் இல்லை என்பது போல் அப்பாத்திரத்தை ஆசிரியர் புலப்படுத்தியுள்ளார் எனலாம்.

### தீர்மானிக்கும் திறன்

அடுத்தபடி நாம் என்ன செய்ய வேண்டும் என்று தீர்மானிக்க வேண்டியிருக்கிறதே. அது தான் இல்வாழ்க்கையின் மிகப் பெரிய துக்கம், வலி, அவஸ்தை எல்லாம். இது பற்றித் தெளிவுள்ளவன் ஞானியாகிறான். நம்மில் ஞானிகள் வெகு சிலரே(8) என்று கூறுவர். பெண்கள் மனதில் என்ன இருக்கிறது என்பதை யாராலும் புரிந்துகொள்ள முடியாது. படித்த பெண்ணாக இருந்தாலும் படிக்காத பெண்ணாக இருந்தாலும் அவள் அடுத்து என்ன செய்யப் போகிறாள் என்பது புரியாத புதிராகும்.

இப்புதினத்தில் ராதா தன் அப்பாவினால் பல நிலைகளில் அவனமானப்படுத்தப்படுகிறாள். படித்த பெண்ணாக ராதா இருப்பினும் அப்பாவின் கடுஞ்சொற்களைத் தாங்க முடியாமல் மீண்டும் படிப்பைத் தொடர நினைக்கிறாள். துன்ப நிலையில் ராதா இருந்தாலும் படிப்பு என்பதே வாழ்க்கையைத் தீர்மானிக்கும் என்ற எண்ணத்தினால் படிக்கத் தீர்மானிக்கிறாள். ராதாவின் தீர்மானம் இப்புதினத்தில் பெண்களுக்குப் பெருமை சேர்ப்பதாக அமைந்துள்ளது

### குடும்பத்தில் தந்தை மகள் உறவு நிலை

குடும்பத்தில் அன்பும் பாசமும் நிறைந்த நல்ல நண்பர்களாகத் திகழும் தந்தையர் இருக்கின்றனர். அதே சமயம் மகள் மீது எப்போதும் ஐயம் கொள்ளும் தந்தையரும் இருக்கின்றனர்.

இப்புதினத்தில் ராதா மீது அவளது அப்பா வெறுப்பையே காட்டுகிறார். சாதாரண மனிதரிடத்தில் காட்டும் அன்பைக் கூட தன் சொந்த மகளிடம் அவர் காட்டவில்லை. இப்படி தன் மகள் மீது அன்பே காட்டாத ஒரு தந்தையை ஆசிரியர் சுருதி பேதங்கள் என்னும் புதினத்தில் படைத்துள்ளார்.

### குடும்பத்தில் ஆண்களால் பெண்களுக்கு ஏற்படும் இழி நிலை

பெண்கள் குடும்பத்தின் ஓர் அங்கமாக இருந்தாலும் அக்குடும்ப உறுப்பினர்களாலேயே அவர்களுக்குச் சிக்கல்கள் ஏற்படுகின்றன. பெண்களுக்கு ஆண்களால் மட்டுமின்றி குடும்பத் தலைவரான தந்தையாலும் கணவனாலும் துன்பங்கள் ஏற்படுகின்றன என்பதை சுருதிபேதங்கள் என்னும் புதினத்தின் வாயிலாக ஆசிரியர் புலப்படுத்தியுள்ளார் எனலாம்.

இப்புதினத்தில் ராதா தந்தையின் கடுமையான பேச்சுக்கு ஆட்படுபவளாகவும், ஜெயாவின்

கணவனால் அவள் சந்தேகம் கொள்ளப்படுபவளாகவும் ஆசிரியர் படைத்துக் காட்டுவதன் மூலம் குடும்பத்தில் ஆண்களால் பெண்களுக்கு ஏற்படும் இழிநிலை மெய்ப்பிக்கப்படுகிறது எனலாம்.

## முடிவுரை

இக்கட்டுரையின் வழி குடும்பம் என்பதன் விளக்கம், குடும்பம் அமைப்பு, குடும்பத்தில் பெண்ணின் சார்பு நிலை, குடும்பச்சூழலில் பெண்கள் வாழும் முறை, மரபுத்தனமான வாழ்வு, குடும்பத்தில் மரபை விட்டு ஒதுங்கி வாழும் பெண்கள், பெண்கள் வாழ்வில் குடும்ப உறவுகளில் ஏற்படும் சிக்கல்கள் குடும்ப உறவு நிலையில் தாய்மையின் நிலைப்பாடு, திருமணத்திற்கு முன்னும் பின்னும் பெண்கள், இப்புதினத்தில் இடம் பெறும் பெண்களின் உறவினர் நிலைகள் மற்றும் குடும்ப வாழ்வில் பெண்களின் நிலைப்பாடு குறித்த கருத்துக்களையும் அறிந்துகொள்ளமுடிகிறது. குடும்பத்தில் பெண்களுக்கு ஏற்படும் அவல நிலை நீங்க வேண்டும். பெண்களுக்கு நிகழும் கொடுமைகள் களையப்பட வேண்டும். இவையனைத்தும் பெண்மை நலத்திற்குத் தீர்வுகளாக அமைவதை இந்நாவலில் காணமுடிகின்றது.

## அடிக்குறிப்புகள்

1. சுபாசு, தரவும் தகவலும், ப.95
2. அகிலன், சமுதாய முறையும் கதைத் தலைவியரும், ப.107
3. வாஸந்தி, சுருதி பேதங்கள், ப.78
4. மேலது ப.79
5. திலகவதி ஐ.பி.எஸ், பெண்ணாகப் பிறந்து விட்டோமே என்று எப்போதாவது வருத்தப்பட்டது உண்டா. ஆண்டு இதழ் - 12, 1.9.88, ப.30
6. டாக்டர் சி.வ சசிரேகா, தமிழ் இதழ்கள் காட்டும் மகளிர் நிலை, ப.30
7. வாஸந்தி, சுருதி பேதங்கள், ப.126
8. பாலகுமாரன், சின்ன வட்டங்கள், ப.13